# ஏப்ரல் - 11- செவ்வாய்
## புனித இஸ்தனிஸ்லாஸ்

**"எனக்காக உயிரையும் கொடுப்பாயோ?" யோவா 13:38**

**முதல் வாசகம் : ஏசாயா 4 9 : 1 - 6**

தீவு நாட்டினரே, எனக்குச் செவிகொடுங்கள் தொலைவாழ் மக்களினங்களே, கவனியுங்கள் கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார் என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார் தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார் என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார் தம் அம்பறாத் தூணியில் என்னை மறைத்துக் கொண்டார். அவர் என்னிடம், "நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்" என்றார். நானோ, "வீணாக நான் உழைத்தேன் வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன் ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது" என்றேன். யாக்கோபைத் தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்டு இஸ்ரயேலை ஒன்று திரட்டவும் கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார் ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப்பெற்றவன் என் கடவுளே என் ஆற்றல் அவர் இப்பொழுது உரைக்கிறார். அவர் கூறுவது யாக்கோபின் குலங்களை நிலைநிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.

**பதில்பாடல் :** என் வாய் நாள்தோறும் உம் மீட்பை எடுத்துரைக்கும்

**நற்செய்தி : யோவான் 13 : 21– 33, 36 - 38**

அக்காலத்தில் சீடர்களுடன் பந்தியமர்ந்த இயேசு உள்ளம் கலங்கியவராய், "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று திட்டவட்டமாகக் கூறினார். யாரைப் பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்று ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். இயேசுவின் சீடருள் ஒருவர் அவர் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்தார். அவர்மேல் இயேசு அன்பு கொண்டிருந்தார். சீமோன் பேதுரு அவருக்குச் சைகை காட்டி, "யாரைப்பற்றிக் கூறுகிறார் எனக்கேள்" என்றார். இயேசுவின் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்த அவர், "ஆண்டவரே அவன் யார்?" என்று கேட்டார். இயேசு மறு மொழியாக, "நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்" எனச் சொல்லி, அப்பத் துண்டைத் தோய்த்துச் சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசுக்குக் கொடுத்தார். அவன் அப்பத் துண்டைப் பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான். இயேசு அவனிடம், "நீ செய்ய விருப்பதை விரைவில் செய்" என்றார். இயேசு ஏன் அவனிடம் இப்படிக் கூறினார் என்பதைப் பந்தியில் அமர்ந்திருந்தோர் யாரும் புரிந்து கொள்ளவில்லை. பணப்பை யூதாசிடம் இருந்ததால், திருவிழாவுக்குத் தேவையானதை வாங்கவோ ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கவோ இயேசு அவனிடம் கூறியிருக்கலாம் என்று சிலர் நினைத்துக்கொண்டனர். யூதாசு அப்பத் துண்டைப் பெற்றுக் கொண்டவுடன் வெளியே போனான். அது இரவு நேரம். அவன் வெளியே போனபின் இயேசு, "இப்போது மானிடமகன் மாட்சி பெற்றுள்ளார். அவர் வழியாகக் கடவுளும் மாட்சிபெற்றுள்ளார். கடவுள் அவர் வழியாக மாட்சி பெற்றாரானால் கடவுளும் தம் வழியாய் அவரை மாட்சிப்படுத்துவார். பிள்ளைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது. இதையே யூதர்களுக்குச் சொன்னேன் இப்போது உங்களுக்கும் சொல்கிறேன். சீமோன் பேதுரு இயேசுவிடம், "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "நான் போகுமிடத்திற்கு என்னைப் பின்தொடர்ந்து வர இப்போது உன்னால் இயலாது பின்னரே என்னைப் பின்தொடர்வாய்" என்றார். பேதுரு அவரிடம், "ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின்தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** நாம் குருத்தோலை ஞயிறுடன் புனித வாரத்தை ஆரம்பித்துள்ளோம். யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்வுகளை தியானிக்க அழைக்கப்பட்டுள்ளோம். நமக்காக பலியானவர் நம் யேசு. நம் பாவங்களை பாரச்சிலுவையாக தோளிலே சுமந்தவர் அவர். நினைக்கும் போது நம் நெஞ்சம் கனக்கவில்லையா? இன்றும் கூட தமது குடும்பத்திற்காக உழைத்து தம்மையே கரைப்பவர்கள் இல்லையா? சகோதரர்களின் நல் வாழ்விற்காக, தம் வாழ்வின் வசந்தங்களை தொலைப்பவர்கள் இல்லையா? நண்பனைக் காக்க தன் உயிர் தந்தவர்கள் இல்லையா? யேசு இன்றும் நம் மத்தியில் இப்படிப் பட்டவர்களின் வடிவில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். வருடா வருடம் வந்து போவது போல் புனித வாரம் வந்திருக்கிறது. நாம் ஆலயத்திற்கு சென்று நம் கடமைகளை முடித்தால் சரி என்று நினைக்கின்றோமா? அப்பாடா தவக்காலம் முடியப்போகிறது, நாம் குடிக்காமல் விட்டதை குடிக்கலாம், அல்லது மரக்கறி சாப்பாட்டில் இருந்து விடுதலை பெறலாம் என்று நினைக்கின்றோமா? யேசு நம்மிடம் என்ன எதிர் பார்க்கிறார்? இவற்றையா? இல்லை. மனமாற்றம் பெற்ற உள்ளத்தை, நொறுங்கிய உள்ளத்தை. அன்பை, மன்னிப்பை, தாழ்ச்சியை அவர் எதிர் பார்க்கிறார். இவற்றை நாம் கடைப் பிடிக்கும்போது ஒவ்வொரு நாழும் நமக்கு புனித நாள், ஒவ்வொரு வாரமும் புனித வாரம்.